# தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு

## ஆண்டறிக்கை 2013




தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு
31/9,31/10, டட்லி சேனாநாயக்க மாவத்தை
கொழும்பு 08
தொ.பே: 011-2680711, 2680712
தொலைநகல்: 011-2680713, மின்னஞ்சல்: nastecsl@yahoo.com

# தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு

## ஆண்டறிக்கை 2013

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு
31/9,31/10, டட்லி சேனாநாயக்க மாவத்தை
கொழும்பு 08
தொ.பே: 011-2680711, 2680712
தொலைநகல்: 011-2680713, மின்னஞ்சல்: nastecsl@yahoo.com

# எம்மைப்பற்றி

1994ம் ஆண்டின் 11ம் இலக்க தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு (NASTEC) தாபிக்கப்பட்டதோடு, 1998ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொழிற்பட ஆரம்பித்தது. இது 1998 டிசம்பர் 6 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன் 1999 ஜனவரியில் ஆணைக்குழுவாக இயங்க ஆரம்பித்தது.

**NASTEC** இலங்கை அரசாங்கத்தின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பிலான மேல்மட்ட கொள்கை உருவாக்கம் மற்றும் ஆலோசனை அமைப்பாக உள்ளது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களை ஆணைக்குழு உள்ளடக்கியுள்ளது.

# ஆண்டறிக்கை 2013

*தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுச் செயலகத்தின்* ***(NASTEC)*** *ஒரு வெளியீடு*

***பதிப்பாசிரியர்: கலாநிதி முதிதலியனகெதர***

***தொகுப்பாசிரியர்: செல்வி நிஷாந்திமஹூரகே***

***தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு***
***31/9,31/10, டட்லி சேனாநாயக்க மாவத்தை***
***கொழும்பு 08***

தொலைபேசி: **0112680711/2** தொலைநகல்: **0112680713**
மின்அஞ்சல்: nastecsl@yahoo.com, இணையத்தளம்: www.nastec.lk

# பொருளடக்கம்


| | |
|---|---|
| எமது தொலைநோக்கு மற்றும் செயற்பணி | 04 |
| தலைவரின் செய்தி | 05 |
| பணிப்பாளரின் செய்தி | 08 |
| ஆணைக்குழு உறுப்பினர்கள் | 10 |
| நிறுவனத்தின் விபரத் திரட்டு | 14 |
| நிறுவனக் கட்டமைப்பு | 15 |
| விஞ்ஞான, தொழில்நுட்ப மீளாய்வு | 16 |
| சர்வதேச உறவுகள் | 20 |
| ஏனைய **NASTEC** செயற்பாடுகள் | 21 |
| எமது பதவியணியினர் | 28 |
| பதவியணியினர் செய்திகள் | 29 |
| பதவியணியினர் பங்கேற்ற நிகழ்ச்சிகள் | 30 |
| நன்றியுரை | 31 |
| நிதிக் கூற்று | 32 |

# தொலைநோக்கு மற்றும் செயற்பணி

*எமது தொலைநோக்கு*

*“விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் பயன்பாட்டின் ஊடாக இலங்கை மக்களின் நன்நிலைத்திருத்தலையும் சுபீட்சத்தையும் மேம்படுத்தும் பொருட்டு அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குகின்ற மிகச் சிறந்த நிறுவனமாகத் திகழ்தல்"*

*எமது செயற்பணி*

*“நிலைபேறான அபிவிருத்தியின் பிரயோகத்திற்காக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய இயலுமையைக் கட்டியெழுப்புவதற்கான கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் திட்டங்களை அரசாங்கத்துக்கு வழங்கல்”*

# தலைவரின் செய்தி



தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் என்ற வகையில் எனது இச் செய்தியை ஆண்டறிக்கையில் குறிப்பிடுவது மிக மகிழ்ச்சியுடனாகும். 2011 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தலைவர் பதவி மற்றும் ஆணைக்குழுவின் ஏனைய பதவிகள், கௌரவ விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் 2013 ஏப்பிரல் மாதம் 22 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றவாறு அதிமேதகு சனாதிபதி அவர்களால் நிரப்பப்பட்டது. புதிய ஆணைக்குழு மார்ச் மாதம் 07 ஆம் திகதி முதற் தடவையாகக் கூடி அதன் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தது. புதிய ஆணைக்குழு நியமிக்கப்படும்வரை கலாநிதி முதித லியனகெதர பதில் பணிப்பாளராக ஆணைக்குழு அலுவலகத்தின் வேலைகளை சிறந்த முறையில் பேணிவந்தார் என்பதோடு இது தொடர்பில் அவர் மேற்கொண்ட முயற்சியை பெரிதும் பாராட்டுகிறேன்.

நியதிச்சட்ட கடமைகளை தொடர்ச்சியாக நிறைவேற்றிவந்து, இவ்வாண்டிலும் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு இந்நாட்டின் விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வு, 2012 ஆம் ஆண்டுக்கான நாட்டின் விஞ்ஞான, தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய அறிக்கையைத் தயாரித்தல், அணிசேரா நாடுகளினதும் ஏனைய அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளினதும் விஞ்ஞான, தொழில்நுட்ப மத்திய நிலையத்தின் (நாம் விஞ்ஞான, தொழில்நுட்ப மத்திய நிலையம்) தேசிய கேந்திர நிலையமாக செயற்படுதல் மற்றும் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரால் ஒப்படைக்கப்படுகின்ற ஏனைய ஏற்புடைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றில் தொடர்புகொண்டது.

2013 ஆம் ஆண்டினுள் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் அடிப்படைக் கற்கைகள் நிறுவகம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம், தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் ஆகிய நிறுவனங்களின் மீளாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் மீளாய்வுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததோடு, மேலும் ஒரு நிறுவனத்தின் வரைவு மீளாய்வு அறிக்கை மீளாய்வுக் குழுவினால் பூர்த்தி செய்யப்பட்டு விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டும் கருத்துக்களைப் பெறும் பொருட்டு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. ஏனைய இரண்டு மீளாய்வு அறிக்கைகளும் ஆண்டின் இறுதியில் கிடைப்பதற்கு உத்தேசமாயிருந்தது.

2011 ஆம் ஆண்டுக்கான நாட்டின் விஞ்ஞான, தொழில்நுட்ப நிலைமை பற்றிய அறிக்கையை பூர்த்தி செய்வதற்கு ஆணைக்குழு அலுவலகத்தினால் இயலுமாயிருந்ததோடு, அது அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டுக்கான குறித்த அறிக்கையைத் தயாரிக்கும் பணி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் பிரிவின் உதவிப் பேராசிரியர் திருமதி சீ.பி. அபேரத்னவுக்கு ஒப்படைக்கப்பட்டதோடு அவர் அதற்கான ஆரம்பத் தரவுகளைத் திரட்டுவதை நிறைவுசெய்து வரைவு அறிக்கையை இவ்வாண்டினுள்

நிறைவு செய்துள்ளார். ஆண்டின் இறுதிப் பகுதியில் இந்த அறிக்கை பல்வேறு விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் அபிப்பிராயங்கள் மற்றும் கருத்துக்களை பெறும் பொருட்டு அவற்றுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவானது நாம் விஞ்ஞான, தொழில்நுட்ப மத்திய நிலையத்தின் கேந்திர நிறுவனமாக தொடர்ந்தும் செயலாற்றி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய பெறுமதியான பயிற்சி வாய்ப்புகளை இணைப்பாக்கம் செய்தது.

ஆணைக்குழுவின் வழக்கமான பணிகளுக்கு மேலதிகமாக தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு, ஆணைக்குழுவினால் நிறைவேற்ற வேண்டிய ஒருசில பணிகளையும் ஒப்படைத்தது. தேறிய மற்றும் நடைமுறை ஆராய்ச்சிகளுக்கு நிதியங்களை வழங்குகின்ற அளவுகோள்களை தயாரித்தல், இரட்டைச் செயற்பாட்டைத் தவிர்க்கும் பொருட்டு தேசிய விஞ்ஞான மன்றத்தினாலும் தேசிய ஆராய்ச்சி சபையினாலும் வழங்கப்பட வேண்டிய ஆராய்ச்சி நிதிய வகைகளை வகைப்படுத்திக் காட்டுதல் ஆகியன, ஒப்படைக்கப்பட்ட பணிகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒப்படைப்புகளாகும். தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவானது தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சுடன் இணைந்து நடத்திய பங்கேற்புச் செயலமர்வுகள் மற்றும் அறிவுக் கிளர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக, இத்துறையுடன் பிணைந்துள்ள பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை தீர்க்கும் பொருட்டு விஞ்ஞான, தொழில்நுட்ப தலையீடு தேவைப்படுகின்ற, கவனம் செலுத்தப்பட வேண்டிய பல துறைகளையும் இனங்காண்பதற்கு இயலுமாயிருந்தது. இந்த ஆரம்பப் பணியானது இந்நாட்டின் விஞ்ஞான, தொழில்நுட்ப துறையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றிய விபரமான முதலீட்டுத் திட்டமொன்றை தயாரிப்பதற்கான அடிப்படையை அமைத்துக்கொடுத்தது.

இந்த ஆண்டிலும் இளம் விஞ்ஞானிகள் ஒன்றியம் கடந்த ஆண்டுகளைப் போன்றே முனைப்புடன் செயலாற்றியது. இதன் மூலம் இந்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பரந்து காணப்படுகின்ற கனிஷ்ட இளம் விஞ்ஞானிகளின் ஆற்றல் வளர்ச்சிக்கு ஏற்புடையதான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துவதற்கு இயலுமாயிருந்தது.

விஞ்ஞான பணியாட்டொகுதி, குறிப்பாக சிரேஷ்ட மட்டத்திலான பணியாட்டொகுதியினரை ஆட்சேர்ப்பதற்கு உள்ள வசதியீனம் காரணமாக தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்கியுள்ளது. இச் சிரமங்கள் காணப்படுகின்றபோதுகூட ஆணைக்குழுவினால் அதன் பணிகளை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தையும் தாண்டிச் சென்று மேலும் வெற்றிகரமான விதத்தில் நிறைவேற்றுவதற்கு இயலுமாயிருந்தது, பிரதானமாக அதன் பணியாட்டொகுதியின் அர்ப்பணிப்பின் காரணத்தினாலாகும்.

**பேராசிரியர் டீ.ஏ. தந்திரிகொட**
**துலைவ**

# பணிப்பாளரின் செய்தி



2013 ஆம் ஆண்டுக்கான தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆண்டறிக்கைக்கு இச் செய்தியை வழங்குவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகின்றபோது 2013 ஆம் ஆண்டு தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு பயனுறுதியானதொரு ஆண்டாக அமைந்திருந்தது. இதற்கு முன்னர் இருந்த ஆணைக்குழுவின் பதவிக் காலம் 2011 ஆம் ஆண்டில் முடிவடைந்ததன் பின்னர், இவ்வாண்டில் புதியதொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்ட பணிப்பாளர் பதவி புதிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டதன் பின்னர் நிரப்பப்பட்டது.

விஞ்ஞான பணியாட்டொகுதியினருக்கான பற்றாக்குறை காணப்பட்ட போதிலும், இவ்வாண்டினுள் மீளாய்வுக்கு உள்ளாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நான்கு நிறுவனங்களினதும் மீளாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கும் 2012 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப தர மீளாய்வை மேற்கொள்வதற்கும் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு இயலுமாயிருந்தது. இதேவேளை 2014 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு உத்தேசமாயுள்ள ஏழாவது இருதரப்பு தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப மாநாட்டின் (BICOST-VII) ஆரம்ப செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டின் விஞ்ஞான, தொழில்நுட்ப நிலைமைகளைப் பற்றி ஆராய்கின்றபோது இலங்கைக்கு அண்மைக்காலத்தில் அதன் விஞ்ஞான ரீதியிலான வெற்றிகளையிட்டு பெருமைப்பட முடியாதுள்ளது. திருப்தியடையக் கூடியதான விஞ்ஞான ரீதியிலான வெற்றிகள் காணப்படாமைக்கு ஏதுவாயமைந்த ஒருசில காரணங்கள் யாவையெனில், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் காணப்படுகின்ற குறைந்த கவர்ச்சியின் காரணமாக விஞ்ஞான ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு இயலாதிருந்தமை, விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்குப் பொருத்தமான வினைத்திறன்மிக்க கொள்வனவு வழங்கல் நடைமுறைகள் காணப்படாமை, ஆராய்ச்சிகளை வர்த்தகமயப்படுத்துவதற்கான தொடக்க நிலைமையொன்று காணப்படாமை ஆகிய காரணிகளாகும். மேலும், நாட்டின் விஞ்ஞான, தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சிக்கு கொள்கை மட்டத்திலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருப்பின் விஞ்ஞான, தொழில்நுட்ப ஆற்றல்கள் தேய்வடைந்து செல்வதைத் தவிர்க்க முடியாது.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை பிரதானமான போக்கின் பொருளாதார அபிவிருத்தி மூலோபாயங்களிலிருந்து பிரிக்க முடியாது. நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு மிக முக்கியமாயமைவது விஞ்ஞான ரீதியில் முன்னேற்றமடைந்த பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்திசெய்வதற்கு நாட்டிற்குள்ள இயலுமையேயன்றி அவ்வானவற்றை வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்வதற்கு அதற்குள்ள இயலுமையல்ல. விஞ்ஞான ரீதியில் முன்னேற்றமான தேசமொன்றை கட்டியெழுப்பும் பணியை முன்னிட்டான அரசியல் அர்ப்பணிப்பு காணப்படின், அதற்கு கொள்கை ஏற்பாடுகளின் ஊடாக பங்களிப்புச் செய்வதற்கு தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு தயாராயுள்ளது.

நிறுவனத்தின் வருடாந்த குறிக்கோள்களை அடையப்பெறும் பொருட்டு தொடர்ந்து பங்களிப்பு வழங்கிய தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் மிகச் சிறிய பணியாட்டொகுதிக்கு எனது நேர்மையான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கு இதனை ஒரு சந்தர்ப்பமாக ஆக்கிக்கொள்கிறேன்.

**கலாநிதி முதித லியனகெதர**
**பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்**

# ஆணைக்குழு உறுப்பினர்கள்



**பேராசிரியர் டீ.ஏ. தந்திரிகொட**

**தலைவர்**

தலைவர் மற்றும் பௌதீகவியல் சிரேஷ்ட பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம் (2004 முதல் இன்றுவரை), பௌதீகவியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம் (1996-2004), தொழில்நுட்ப ஆலோசகர், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகம் (2012), பிரதம ஆலோசகர், கொள்கை மற்றும் மூலோபாய பிரிவு, உயர் கல்வி அமைச்சு (2007-2008), வெளிவாரி ஆராய்ச்சி உயர் புலமைப்பரிசில், எடின்பர்க் பல்கலைக் கழகம் (1993-1994).



**பேராசிரியர் ஆர்.ரீ. குமாரணதுங்க**

சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் சமுத்திர உயிரியல் பேராசிரியர், கடற்றொழில், நீரியல் வளத் திணைக்களம், கடற்றொழில் மற்றும் சமுத்திரவியல், தொழில்நுட்ப பீடம், றுனுணு பல்கலைக் கழகம் (2007 முதல் இன்று வரை), ஸ்தாபகர்/பீடாதிபதி, கடற்றொழில் மற்றும் சமுத்திரவியல், தொழில்நுட்ப பீடம் (2005 முதல் 2008), தலைவர், சமுத்திர உயிரியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், றுகுணு பல்கலைக் கழகம் (1990-2005)

இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தில் (SLAAS) வகித்துள்ள பதவிகள்

o பொதுத் தலைவர் (2013),

o நிர்வாகப் பேரவை அங்கத்தவர் (2003, 2004, 2006, 2007, 2010, 2011)

o பிரிவு டீ (இயற்கை விஞ்ஞானம்) - தலைவர் (2003), பிரதித் தலைவர் (2002), செயலாளர் (2000), குழு அங்கத்தவர் (1998 முதல் 2004).

o CPS – தவிசாளர் (2005), குழு அங்கத்தவர் (2003, 2008, 2011)

o விஞ்ஞானக் கல்விக் குழு - தவிசாளர் (2011)



**திரு. டீ. பர்னாந்து**

திரு. பீ.டீ. பர்னாந்து, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழக பட்டதாரி, 1976 இல் இலங்கை சுங்கத்தில் இணைந்தார் என்பதோடு, 1979 இல் வர்த்தக திணைக்களத்தில் உதவி வர்த்தக பணிப்பாளராக இணைந்தார். வர்த்தக மேம்பாடு மற்றும் சர்வதேச வர்த்தக சட்டம் தொடர்பில் பெரும் அனுபவத்தை கொண்டுள்ள இவர் கராச்சி, டோக்கியோ, பொன், புரூசல்ஸ், டுபாய் மற்றும் சிட்னி போன்ற 7 நாடுகளில் தூதரக வர்த்தகப் பிரதிநிதியாக சேவையாற்றியுள்ளார். இவர் புரூசல்ஸ் பல்கலைக் கழகத்தில் சர்வதேச உறவுகள் தொடர்பில் தனது முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் இறுதியாக வர்த்தக திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றிவிட்டு 2013 செப்தெம்பர் மாதத்தில் ஓய்வு பெற்றுள்ளார். இவர் ஓய்வு பெற்றதன் பின்னர் ஏற்றுமதி - இறக்குமதி முகாமையாளர்களாக தொழில்சார் பயிற்சியை வழங்குகின்ற கல்லூரியான புதிதாக தாபிக்கப்பட்ட தேசிய ஏற்றுமதி நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராக செயலாற்றியுள்ளார்.



**பேராசிரியர் ஏ.ஏ.பீ.எஸ். மனம்பேரி**

சிரேஷ்ட விரிவுரையாளர், அணு மருத்துவப் பிரிவு, மருத்துவ பீடம், களனிய பல்கலைக் கழகம், ஆலோசகர் அணு உயிரியலாளர், டர்டன்ஸ் ஆஸ்பத்திரி (2007 முதல் இன்று வரை), ஆலோசக தொழில்நுட்ப மதிப்பீட்டாளர், SLAB (2008 முதல் இன்று வரை), விரிவுரையாளர்/செய்துகாட்டுனர், களனிய பல்கலைக் கழகம் (1997-1998), ஆராய்ச்சி உதவியாளர், கொழும்பு பல்கலைக்கழகம் (1998)



**கலாநிதி பி.எம்.எஸ். பட்டகொட**

பணிப்பாளர் நாயகம், பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி, நிதி, திட்டமிடல் அமைச்சு (2008 முதல் இன்று வரை), பிரதம நிறைவேற்று அலுவலர், கருத்திட்ட முகாமைத்துவ பணியகம், பொதுத் திறைசேரி, பிரதம நிறைவேற்று அலுவலர், இலங்கை காபன் நிதியம் (2008 முதல் இன்று வரை), பணிப்பாளர் நாயகம், தொழிற்பாட்டு மற்றும் மீளாய்வு, பொதுத் திறைசேரி (2007-2008), குழுத் தலைவர் மற்றும் ஆலோசகர், இலங்கை காபன் நிதி உதவி நிகழ்ச்சித்திட்டம், உலக வங்கி (2004-2007), பணிப்பாளர் (காலநிலை மாற்றம் மற்றும் உலக அலுவல்கள்), சுற்றாடல், சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சு (1998-2004), அதிமேதகு சனாதிபதி அவர்களின் உதவிச் செயலாளர், சனாதிபதி செயலகம் (1992-1994), பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு (1987-1989), பொது நிர்வாக உதவிப் பணிப்பாளர், பொது நிர்வாக அமைச்சு (1986-



**கலாநிதி எஸ்.எஸ். நமசிவாயம்**

சிரேஷ்ட விரிவுரையாளர், பொறியியல் பீடம், மொரட்டுவை பல்கலைக் கழகம், பீடாதிபதி- புதிய அழைப்பாளர்கள் ICFAI Education Lanka, பட்டய நிதிப் பகுப்பாய்வு நிறுவகம், இந்தியா (2008-2009), பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர், நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ. கிளார்க் நிறுவகம் (2007-2007), தலைவர், இலெக்ட்ரோ தொழில்நுட்பவியல் பிரிவு, கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவகம் (1995-2000).



**கலாநிதி ஜே. வட்டவிதானகே**

விலங்கியல் சிரேஷ்ட விரிவுரையாளர், திறந்த பல்கலைக் கழகம், தவிசாளர், விஞ்ஞான பிரபல்யப்படுத்தல் தேசிய குழு, தேசிய விஞ்ஞான மன்றம் (2010), தேசிய விஞ்ஞான மன்ற விஞ்ஞான நிலைய தொழில்நுட்பக் குழுவின் அங்கத்தவர் (2010), இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் SLAAS சுற்றாடல் குழுவின் தவிசாளர் (2009), டி பிரிவின் தலைவர் (உயிர் விஞ்ஞானம் மற்றும் புவி விஞ்ஞானம்), SLAAS (2006), ஆடை உற்பத்தித் தொழில் வேதனங்கள் சபையின் அங்கத்தவர், தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு அமைச்சு (2005), பொதுச் செயலாளர், SLAAS (2005), நிர்வாக சபை அங்கத்தவர், தேசிய கடற்றொழில் மற்றும் கப்பல் பொறியியல் (சமுத்திர பல்கலைக்கழகம்) (2004), அங்கத்தவர், விஞ்ஞான பிரபல்யப்படுத்தல் குழு, தேசிய விஞ்ஞான மன்றம் (2003), தவிசாளர், விஞ்ஞான பிரபல்யப்படுத்தல் குழு, SLAAS (2002).

# நிறுவனத்தின் விபரத் திரட்டு

- தலைவர் ஆணைக்குழுவுக்கு தலைமை வகிக்கின்றார்.
- பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராவார்.
- கொள்கைகள், திட்டங்கள் மற்றும் ஏனைய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ஆவணங்களைத் தயாரிக்கின்ற ஆய்வுக் குழுக்கள் மற்றும் ஆலோசனைச் சபைகளுக்கான வசதியேற்பாடுகளையும் முகாமை செய்தலையும் சிரேஷ்ட விஞ்ஞானிகள் மேற்கொள்கின்றனர்.
- நிறைவேற்றுச் செயலாளர் ஆணைக்குழுவின் செயலாளராகவும் அலுவலக முகாமையாளராகவும் கடமையாற்றுகின்றார்.
- நிதி சம்பந்தமான சகல விடயங்களையும் பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) முகாமை செய்கின்றார்
- ஆணைக்குழுவால், தேவையின் அடிப்படையில் விசேட பணிகள் மற்றும் ஒப்படைகளை மேற்கொள்வதற்காக ஆலோசகர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்கள் தற்காலிகமாக வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

# நிறுவனக் கட்டமைப்பு



# விஞ்ஞான தொழில்நுட்ப மீளாய்வு

***நாட்டின் தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய ஆண்டு மீளாய்வு***

தொடர்ந்து வந்த ஆண்டினுள் இலங்கையின் விஞ்ஞான தொழில்நுட்ப செயற்பாடுகளின் மீளாய்வைப் பற்றி அரசாங்கத்திற்கு வருடாந்தம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஆணைக்குழுவுக்கு தத்துவமளிக்கப்பட்டிருக்கின்றது. வருடாந்தம் நாட்டின் விஞ்ஞான தொழில்நுட்ப நிலைமைகளைப் பற்றி மீளாய்வு செய்தலானது விஞ்ஞான தொழில்நுட்ப துறையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் கொள்கை ஆக்கத்திற்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

2012 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதான தகவல்களைப் பெறுவதற்காக நாட்டிலுள்ள 26 ஆராய்ச்சி நிறுவனங்களைப் பயன்படுத்தி வினாக்கொத்து ரீதியிலான ஆய்வொன்றை 2013 ஆம் ஆண்டினுள் NASTEC மேற்கொண்டது. பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் "2012 இல் இலங்கையின் விஞ்ஞான, தொழில்நுட்ப நிலைமை" பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இவ்வறிக்கையானது பின்வரும் பிரதானமான ஆக்கக்கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

i) விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனத்திலுள்ள மனித மற்றும் பௌதீக வளங்கள்

ii) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பொதுச் செலவுகளின் விளைவுத்தாக்கம்

iii) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை

iv) கற்றோர் சமூகத்தின் விஞ்ஞான, தொழில்நுட்ப செயற்பாடுகள்

NASTEC 2013 திசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரைவு அறிக்கையைப் பற்றிக் கலந்துரையாடி அறிக்கையை விருத்தி செய்வதற்கான கருத்துக்கள்/முன்மொழிவுகளைப் பெறும் பொருட்டு விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர்களது கூட்டமொன்றை ஒழுங்கு செய்தது.

மேற்படி மீளாய்வு விடயத்துடன் தொடர்புடையதாக விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் வெளியீடுகளைப் பொறுத்தவரை முறையே 40, 65, மற்றும் 44 நடைமுறைகளும், தொழில்நுட்பங்களும் உற்பத்திகளும் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன. மொத்த வெளியீடுகளின் எண்ணிக்கை 527 ஆகுமென்பதோடு இதில் SCI சஞ்சிகையின் 77 வெளியீடுகள் மற்றும் நடுவர்கள் சஞ்சிகையின் 69 வெளியீடுகளும் உள்ளடங்குகின்றன. இந்நிறுவனங்களால் மூன்று தேசிய ஆக்கவுரிமைகளையும் 17 தேசிய விருதுகளையும், ஆறு சர்வதேச ஆக்கவுரிமைகளையும் ஆறு சர்வதேச விருதுகளையும் பெற முடியுமாயிருந்தது.

***விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்கள் பற்றிய மீளாய்வு***

விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வானது NASTEC க்கு தத்துவமளிக்கப்பட்டுள்ள மேலுமொரு பணியாகும். இத்தத்துவத்தை நிறைவேற்றும் வகையில் இதுவரை பத்து நிறுவன ரீதியிலான மீளாய்வுகள் NASTEC ஆல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டன.

➢ **<u>அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவனத்தின் மீளாய்வு</u>**

IFS அதன் சுய மதிப்பீட்டு அறிக்கையை 2013 பெப்ருவரி 01 ஆம் திகதி NASTEC க்கு சமர்ப்பித்ததோடு அதனைத் தொடர்ந்து IFS இன் இணக்கப்பாட்டுடன் பின்வரும் மீளாய்வாளர்கள் குழு நியமிக்கப்பட்டது.

**மீளாய்வாளர்கள் குழு**

- பேராசிரியர் பீ.எஸ்.பீ. கருணாரத்ன, தலைவர் மற்றும் அங்கத்தவர் (பணிப்பாளர், விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனம்)

ஏனைய அங்கத்தவர்கள்

- பேராசிரியர் நிமல் குணதிலக (தாவரவியல் பேராசிரியர், தாவரவியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், பேராதனை பல்கலைக்கழகம்)
- பேராசிரியர் அனுர விக்கிரமசிங்க, (இரசாயனவியல் பேராசிரியர், இரசாயனவியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், பேராதனை பல்கலைக்கழகம்)
- பேராசிரியர் சிசிர பின்னவல (சமூகவியல் பேராசிரியர், சமூகவியல் திணைக்களம், கலைப் பீடம், பேராதனை பல்கலைக்கழகம்)
- கலாநிதி ஜகத் குணதிலக (புவிச் சரிதவியல் பேராசிரியர், புவிச் சரிதவியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், பேராதனை பல்கலைக்கழகம்)

மீளாய்வுக் குழுவின் முதலாவது கூட்டம் 2013 பெப்ருவரி மாதம் 08 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றதோடு, இக் கூட்டத்தில் மீளாய்வுத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. 2013 மார்ச் மாதம் 08 மற்றும் 15 ஆம் திகதிகளில் குழு IFS க்குச் சென்றது. சபை மட்டத்திலான முகாமைத்துவ கண்ணோட்டத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதாக குழு நிறுவனத்தின் பணிப்பாளர் சபையையும் சந்தித்து. இறுதியாக குழு 2013 ஏப்பிரல் மாதம் 30 ஆம் திகதி IFS இன் பற்குதாரர்களுடன் கலந்துரையாடலொன்றை நடத்தியது.

2013 ஜுன் 28 ஆம் திகதி மீளாய்வு அறிக்கையின் முதலாவது வரைவு IFS க்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு, IFS ஆல் வழங்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அது சிறிதளவு திருத்தப்பட்டது. 2013 ஒக்றோபர் 14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இறுதி மீளாய்வு அறிக்கையை IFS ஏற்றுக்கொண்டது.

## ➢ <u>கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மீளாய்வு</u>

2013 ஏப்பிரல் மாதம் 04 ஆம் திகதி ITI இன் சுய மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர், அதனை மீளாய்வு செய்யும் பொருட்டு ITI இன் இணக்கப்பாட்டுடன் NASTEC இனால் மீளாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. குழுவின் அங்கத்தவர்கள் வருமாறு-

தலைவர் - பேராசிரியர் எஸ். விதானபதிரண (நுண்உயிரியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், களனிய பல்கலைக்கழகம்)

ஏனைய அங்கத்தவர்கள்

- பேராசிரியர் கே.கே.டீ.எஸ்.ரணவீர (பணிப்பாளர், பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம்)
- பேராசிரியர் ஈ. திலிப் த சில்வா (இரசாயனவியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்)
- திரு. முதன்நாணயக்க (முன்னாள் பணிப்பாளர், அளவைப் பிரிவு, தரக்கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்)
- திருமதி ரமணீ எல்லேபொல (முன்னாள் பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை)

மீளாய்வின் பொருட்டு குழு 2013 மே மாதம் 02 ஆம் திகதியும் ஜுன் மாதம் 13 மற்றும் 25 ஆம் திகதிகளிலும் ஜுலை மாதம் 25 ஆம் திகதியும் ITI சென்றது. மே மாதம் 22 ஆம் திகதி குழு பணிப்பாளர் சபையின் கருத்துக்களைப் பெறுவதற்காக அவர்களைச் சந்தித்தது. ITI பற்றிய பங்குதாரர்களின் கருத்துக்களைப் பெறும் பொருட்டு 2013 ஜுலை 25 ஆம் திகதி அவர்களுடனான கூட்டமொன்று நடைபெற்றது. கருத்துக்களைப் பெறும் பொருட்டு 2013 ஒக்றோபர் மாதம் 11 ஆம் திகதி மீளாய்வு அறிக்கையின் முதலாவது வரைவு ITI க்கு சமர்ப்பிக்கப்பட்டது. இறுதி அறிக்கைக்கான கருத்துக்களின் பொருட்டு NASTEC காத்திருக்கின்றது.

## ➢ தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மீளாய்வு (NERDC)

2013 ஆம் ஆண்டில் NASTEC மீளாய்வு செய்த மூன்றாவது நிறுவனம் NERDC ஆகும். 2013 மே மாதம் 30 ஆம் திகதி இந்நிலையத்தின் சுய மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து NASTEC இனால் நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அவர்கள் வருமாறு-

- பொறியியலாளர் எஸ்.ஏ.கே. அபேவர்தன - தலைவர் (நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களுக்கான இணைப்புச் செயலகம்)

ஏனைய அங்கத்தவர்கள்

- கலாநிதி மர்வின் குணசேகர (முகாமைத்துவ பணிப்பாளர், LAN முகாமைத்துவ அபிவிருத்திச் சேவை)
- பேராசிரியர் நிரஞ்சனீ ரத்நாயக்க (சிரேஷ்ட பேராசிரியர், சிவில் பொறியியல் திணைக்களம், மொரட்டுவை பல்கலைக்கழகம்)
- பொறியியலாளர் கமலநாத் சமரகோன் ( சிரேஷ்ட விரிவுரையாளர், கனணிப் பொறியியல் திணைக்களம், பொறியியல் பீடம், பேராதனை பல்கலைக்கழகம்)
- திரு. டேமியன் வீரக்கொடி (மனித வள முகாமையாளர், டிரேட்ஸ்மன் எஸ்.எல். (தனியார்) கம்பனி)

2013 ஜுன் 25 ஆம் திகதி, ஜுலை 04 ஆம் திகதி, ஜுலை 09 ஆம் திகதி மற்றும் நவெம்பர் 07 ஆம் திகதி மீளாய்வின் பொருட்டு குழு NERDC க்கு சென்றது. மீளாய்வுக் குழு அங்கத்தவர்களுடனான நிலையத்தின் பங்குதாரர்களது கூட்டம் 2013 ஜுலை 25 ஆம் திகதி நடைபெற்றது. சபை மட்டத்திலான முகாமைத்துவ கண்ணோட்டத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதாக ஜுலை 08 ஆம் திகதி குழு நிறுவனத்தின் பணிப்பாளர் சபையையும் சந்தித்து. ஆண்டின் இறுதியில் முதலாவது வரைவு அறிக்கைக்காக NASTEC காத்திருக்கின்றது.

## ➢ தேசிய விஞ்ஞான மன்றம் (NSF)

2013 ஆம் ஆண்டில் இறுதியாக மீளாய்வு செய்யப்பட்ட நிறுவனம் தேசிய விஞ்ஞான மன்றமாகும். NSF அதன் சுய மதிப்பீட்டு அறிக்கையை 2013 ஜுன் 01 ஆம் திகதி NASTEC க்கு சமர்ப்பித்தது. NSF ஐ மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழு பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது.

- பேராசிரியர் நாரத வர்ணசூரிய, தலைவர் (முன்னாள் உப வேந்தர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

ஏனைய அங்கத்தவர்கள்

- கலாநிதி என்.பீ. விஜயானந்த, புவிச் சரிதவியல் அளவை, சுரங்க பணியகம்)
- பேராசிரியர் ஜே.கே.டீ.எஸ். ஜயநெத்தி (பௌதீகவியல் பேராசிரியர், பௌதீகவியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்)
- பேராசரியர் உதித ஜயசிங்க (சிரேஷ்ட பேராசிரியர், விவசாய வியாபார முகாமைத்துவ திணைக்களம், வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை)

2013 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதற் தடவையாக மீளாய்வுக்கு NSF க்கு சென்றதோடு, பின்னர் 2013 ஆகஸ்ட் 08 மற்றும் ஒக்றோபர் 30 ஆம் திகதிகளில் சென்றது. 2013 ஒக்றோபர் 10 ஆம் திகதி NSF பங்குதாரர்களுக்கும் மீளாய்வுக் குழுக்கும் இடையிலான கூட்டம் நடைபெற்றது. NSF இன் முகாமைத்துவம் பற்றிய மேலதிக தகவல்களைத் திரட்டும் பொருட்டு ஒக்றோபர் 10 ஆம் திகதி பணிப்பாளர் சபையுடனான கூட்டம் நடைபெற்றது. ஆண்டின் இறுதியில் மீளாய்வின் முதலாவது வரைவு அறிக்கைக்காக NASTEC காத்திருக்கின்றது.

# சர்வதேச உறவுகள்

**அணிசேரா நாடுகளினதும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினதும் விஞ்ஞான, தொழில்நுட்ப மத்திய நிலையம் (NAM S&T Centre)**

அணிசேரா நாடுகளினதும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினதும் விஞ்ஞான, தொழில்நுட்ப மத்திய நிலையமானது (NAM S&T Centre) அணிசேரா நாடுகளின் நாட்டுத் தலைவர்களது அல்லது அரசாங்கங்களினது பல்வேறான உச்சி மாநாடுகளின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துவதற்காக அரசாங்கங்களுக்கு இடையிலானதொரு அமைப்பாக 1989 இல் தாபிக்கப்பட்டது. அபிவிருத்தியடைந்துவரும் நாற்பத்து நான்கு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அவற்றின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பில் செயலாற்றுகின்ற அரசாங்க திணைக்களங்கள்/அமைச்சுகள் மற்றும் முகவராண்மைகள் இதுவரை மத்திய நிலையத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளன.. தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவானது NAM S&T மத்திய நிலையத்தில் இலங்கையின் தேசிய மையமாக விளங்குகின்றது.

மத்திய நிலையத்தின் அங்கத்துவ நாடுகளால் ஒழுங்குசெய்யப்பட்ட செயலமர்வுகள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் ஏனைய குறுகிய கால மற்றும் நடுத்தர கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் விஞ்ஞானிகள் மற்றும் ஏனைய அலுவலர்கள் பங்குபற்றுவதற்கு NAM S&T மத்திய நிலையம் வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கின்றது. பங்குபற்றுபவர்களுக்கான விமானப் பயணக் கட்டணத்தை மத்திய நிலையம் வழங்குகின்ற அதேவேளை தங்குமிட வசதிகளை அனுசரணை நாடு வழங்குகின்றது.

ஆண்டினுள் மத்திய நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பின்வரும் செயற்பாடுகளில் பின்வரும் இலங்கை விஞ்ஞானிகள்/அலுவலர்கள் பங்கேற்றார்கள்.

1. திரு. பி.எச்.எம்.பி.கே. சேனாரத்ன, இலங்கை சக்தி தனியார் கம்பனியின் சுற்றாடல் அலுவலர், 2013 ஏப்பிரல் மாதம் 19-22 வரை நேபால், கத்மண்டு நகரத்தில் நடைபெற்ற "அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான Micro-hydel இன் வகிபாகம்" பற்றிய செயலமர்வில் பங்குபற்றினார்.

2. செல்வி சுமிகா பெரேரா, பெண்கள் வள நிலையம், 2013 ஜுன் மாதம் 1-3 வரை இந்தியாவில் நடைபெற்ற "தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஊடாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பெண்களை வலுவூட்டல்" பற்றிய சர்வதேச மாநாட்டில் பங்குபற்றினார்.

3. கலாநிதி இரேஷா கோட்டேகொட, பிரதம ஆராய்ச்சி அலுவலர், , 2013 ஒக்றோபர் மாதம் 2-5 வரை இந்தோனேசியாவில் நடைபெற்ற "நெனோ தொழில்நுட்பம்" பற்றிய சர்வதேச செயலமர்வில் பங்குபற்றினார்.

4. செல்வி உபேகா தீபானி ராஜவர்தன, ஆராய்ச்சி அலுவலர், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானிகளுக்கான ஆறு மாத கால ஆராய்ச்சிப் பயிற்சிக்கான உயர் புலமைப்பரிசில் (RTF –DCS) வழங்கப்பட்டது.

# ஏனைய NASTEC செயற்பாடுகள்

## 🕮 இளம் விஞ்ஞானிகள் அரங்கம் (YSF)

இளம் விஞ்ஞானிகள் அரங்கமானது (YSF) தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் (NASTEC) மிகப் பாரிய ஆலோசனை அரங்கமாகும். இது இலங்கையிலுள்ள இளம் விஞ்ஞானிகளின் வலையமைப்புக்கான ஒரு அரங்கமாகும். அரங்கத்தில் தற்போதைய அங்கத்துவம் 600 ஐயும் தாண்டியுள்ளதோடு, இதில் பிரதானமாக பல்கலைக்கழகங்கள், அரசதுறையைச் சார்ந்த விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்களின் இளம் விஞ்ஞானிகள் உள்ளடங்கியுள்ளனர்.

## 🕮 YSF ஆண்டுப் பொதுக் கூட்டம் – 2012

இளம் விஞ்ஞானிகள் அரங்கத்தின் 2012 ஆண்டுப் பொதுக் கூட்டத்துடன் (AGM) இணைந்ததாக இரண்டாவது YSF கருத்தரங்கு 2013 சனவரி மாதம் 18 ஆம் திகதி ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தின் (HARTI) மஹிந்த சில்வா கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான YSF ஊக்குவிப்புக் குழுவுக்கு பின்வரும் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

- கலாநிதி புத்திக அருக்கொட
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  விவசாய மற்றும் பெருந்தோட்ட பொறியியல் திணைக்களம்,
  பொறியியல் தொழில்நுட்ப பீடம்,
  இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

- திரு. சிதத் பண்டார
  ஆராய்ச்சி அலுவலர்
  நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ திணைக்களம்
  ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

- கலாநிதி சாலிந்த பெனரகம
  பயிரியல் திணைக்களம்
  விவசாய பீடம்
  பேராதனை பல்கலைக்கழகம்

- செல்வி நிசன்சலா போபகே
  இரசாயனவியல் திணைக்களம்
  இயற்கை விஞ்ஞான பீடம்
  இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

- கலாநிதி நிலந்தி தஹநாயக்க
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  விவசாய உயிரியல் திணைக்களம்
  விவசாய பீடம்
  ருகுணு பல்கலைக்கழகம்

- கலாநிதி சுதர்ஷனீ கீகியனகே
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  விவசாய உயிரியல் திணைக்களம்
  விவசாய பீடம்
  ருகுணு பல்கலைக்கழகம்

- கலாநிதி சாமலீ நாஹல்லகே
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  சமூகவியல் மற்றும் மானிடவியல் திணைக்களம்
  ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

- திரு கயந்த கொடிகார
  விரிவுரையாளர்
  சமுத்திரவியல் மற்றும் கடல் புவிச்சரிதவியல்
  கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் பீடம்
  ருகுணு பல்கலைக்கழகம்

- கலாநிதி நிலுக்ஷி லியன குணவர்தன
  விலங்கு ஆராய்ச்சி அலுவலர்
  பக்றீறியலியல் பிரிவு
  விலங்கு ஆராய்ச்சி நிறுவனம்

- திரு. சிந்தன் மனோரத்ன
  ஆராய்ச்சி அலுவலர்
  பௌதீக தொழில்நுட்பவியல் பிரிவு
  கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம்

- திரு. பி. ரணசிங்க
  சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர்
  மூலிகை தொழில்நுட்பவியல் பிரிவு
  கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம்

- செல்வி கீதானி சமரசிங்க
  ஆராய்ச்சி அலுவலர்
  நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ திணைக்களம்
  ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம்

- திரு. அஷ்வின் விக்கிரமசூரிய
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  புவியியல் திணைக்களம்
  கலைப் பீடம்
  பேராதனை பல்கலைக்கழகம்

கலாநிதி புத்திக அருக்கொட ஊக்குவிப்புக் குழுவின் தவிசாளராக செயலாற்றுகின்றார் என்பதோடு, கலாநிதி சுதர்ஷனீ கீகியனகே மற்றும் கலாநிதி நிலந்தி தஹநாயக்க இணைச் செயலாளர்களாக செயலாற்றுகின்றனர்.

## 🕮 <u>இரண்டாவது YSF கருத்தரங்கு</u>

YSF கருத்தரங்கானது இளம் விஞ்ஞானிகள் அரங்கம் (YSF) தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுடன் (NASTEC) இணைந்து 2012 ஆம் ஆண்டில் ஆரம்பித்துவைத்த விஞ்ஞான ரீதியிலான நிகழ்ச்சியொன்றாகும். YSF அங்கத்தவர்களின் ஆராய்ச்சிப் பணிகளை விஞ்ஞான சமூகத்தினருக்கு சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தலும் ஒவ்வொருவரினதும் அனுபவங்களிலிருந்து கற்றலுமே கருத்தரங்கின் குறிக்கோளாகும்.

YSF இரண்டாவது கருத்தரங்கு 100 க்கும் மேற்பட்ட இளம் மற்றும் சிரேஷ்ட விஞ்ஞானிகளின் பங்களிப்புடன் 2013 சனவரி மாதம் 18 ஆம் திகதி ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது. பொழிப்புகளை அனுப்பி வைக்குமாறு NASTEC விடுத்த கோரிக்கைக்கு பிரதிபலிப்புக் காட்டும் வகையில் YSF அங்கத்தவர்களிடமிருந்து 103 பொழிப்புகள் கிடைக்கப்பெற்றன. YSF க்கான கௌரவ சேவையாக இரண்டு சிரேஷ்ட விஞ்ஞானிகளால் ஒவ்வொரு பொழிப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது. அவர்களது சிபாரிசுகளின் அடிப்படையில் வாய்மூல சமர்ப்பணத்திற்காக 57 பொழிப்புகள் தெரிவு செய்யப்பட்டதோடு சுவரொட்டி சமர்ப்பணங்களுக்காக 12 தெரிவு செய்யப்பட்டது. சமர்ப்பணத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பொழிப்புகள் செயல் நடைமுறைகளாக வெளியிடப்பட்டன.

ஆறு தொனிப்பொருள்களின் கீழ் வாய்மூல சமர்ப்பணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- விவசாய விஞ்ஞானம்
- உயிர்இரசாயனவியல் மற்றும் நுண்ணுயிரியல்
- பக்றீரியவியல் மற்றும் அணுஉயிரியல்
- சுற்றாடல் விஞ்ஞானம்
- பௌதீகவியல், பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம்
- சமூக விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம்

அனைத்து சமர்ப்பணங்களும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த சிரேஷ்ட விஞ்ஞானிகளால் மதிப்பீடு செய்யப்பட்டதோடு ஒவ்வொரு அமர்விலும் மிகச் சிறந்த சமர்ப்பணத்திற்கு திறமைச் சான்றிதழ் விருது வழங்கப்பட்டது.

- **திறமைச் சான்றிதழ்களைப் பெற்றவர்கள்**

  - **விவசாய விஞ்ஞானம்**
    ரீ.எம்.எஸ்.ஆர். பெரேரா - பேராதனை பல்கலைக்கழகம்
    ரீ.எச்.பி.எஸ். பர்னாந்து - இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்
    சீ.எல். திலகரத்ன - ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம்

  - **உயிர்இரசாயனவியல் மற்றும் நுண்ணுயிரியல்**
    சீ.கே. பெனரகம - பேராதனை பல்கலைக்கழகம்

என்.எஸ். போபகே - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
ஆர்.பி.எஸ்.எஸ். ராஜபக்ஷ - பேராதனை பல்கலைக்கழகம்
என். லியனகுணவர்தன - விலங்கு ஆராய்ச்சி நிறுவனம்

- **உயிர்தொழில்நுட்பவியல் மற்றும் அணு உயிரியல்**
  பீ.ஜீ.என்.டி.கே. சோமதிலக்க - கொழும்பு பல்கலைக்கழகம்
  சீ. கனட்டிவெல - கொழும்பு பல்கலைக்கழகம்
  எச்.ஏ. தர்ஷனீ ருவன் தீபிகா - இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம்

- **சுற்றாடல் விஞ்ஞானம்**
  எம்.எம்.எம். நஜீம் - களனிய பல்கலைக்கழகம்
  ரீ.எல். விஜயரத்ன - தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்
  ஏ.கே. விக்கிரமசூரிய - இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

- **பௌதீகவியல், பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்**
  ஜீ.ஆர்.என். கொடிகார - நவீன தொழில்நுட்பத்திற்கான ஆதர் சீ கிளார்க் நிறுவனம்
  டபிள்யு.ஜே.எம்.ஜே.எஸ்.ஆர். ஜயசுந்தர - பேராதனை பல்கலைக்கழகம்
  சீ.என். நூபேஆரச்சி - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

- **சமூகவியல் மற்றும் முகாமைத்துவம்**
  ஜே.எம்.எம். உடுகம - இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
  கே.ஜீ.பி.எச். கந்தெகெதர - ரஜரட்ட பல்கலைக்கழகம்
  ஏ.எம். பெரேரா - ரஜரட்ட பல்கலைக்கழகம்

- **சுவரொட்டி அமர்வு**
  சீ.டி. வன்னிஆரச்சி - பேராதனை பல்கலைக்கழகம்
  ஏ.டி. இகலவிதான - அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவனம்
  யு.ஜீ. சந்திரஜித் - அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனம்

## 🕮 YSF விருதுகள் - 2012

தமது செயற் பரப்பினுள் திறமையை வெளிக்காட்டுகின்ற இளம் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கும் பொருட்டு YSF விருதுகள் இரண்டு வகைப்படுத்தல்களின் கீழ் வருடாந்தம் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு விருதும் பணப் பரிசிலையும் சான்றிதழையும் கொண்டுள்ளது. 2013 சனவரி மாதம் 18 ஆம் திகதி நடைபெற்ற YSF வருடாந்த பொதுக் கூட்டத்தில் பின்வரும் விஞ்ஞானிகளுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளினுள் மேற்கொள்ளப்பட்ட அவர்களது பணிகளின் பொருட்டு YSF விருதுகள் வழங்கப்பட்டன.

- **விஞ்ஞான ஆராய்ச்சிகளில் திறமைக்கான விருது, *கலாநிதி சரோஜினீ பர்னாந்து , இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்***

- **விஞ்ஞான பிரபல்யப்படுத்தல் மற்றும் மேம்பாட்டில் திறமைக்கான விருது**



*பேராசிரியர் உதித ஜயசிங்க*
*விவசாய வியாபார முகாமைத்துவ திணைக்களம்*
*விவசாய, பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம்*
*இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்*

## 🕮 உயிர்தொழில்நுட்பம் மற்றும் அணு உயிரியல் கோட்பாடுகள்" பற்றிய ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

கிழக்கு மாகாண உயர்தர விஞ்ஞான ஆசிரியர்களுக்கான “உயிர்தொழில்நுட்பம் மற்றும் அணு உயிரியல் கோட்பாடுகள்” பற்றிய ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை NASTEC மற்றும் YSF கிழக்கு மாகாணத்தின் மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்துடன் ஒன்றிணைந்து ஒழுங்குசெய்தது. சம்மாந்துறையிலுள்ள இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தில் மேற்படி நிகழ்ச்சித்திட்டம் 2013 பெப்ரவரி மாதம் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

உயர்தர பாடத்திட்டத்திற்கு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட உயிர்தொழில்நுட்பம் மற்றும் அணு உயிரியல் துறையிலுள்ள உயர்தர விஞ்ஞான ஆசிரியர்களின் அறிவை இற்றைப்படுத்தும் குறிக்கோளுடன் மேற்படி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயப் பரப்பு கீழே தரப்பட்டுள்ளது.-

- ✓ DNA யின் பண்புகள்
- ✓ தாவர இழைய வளர்ப்பு
- ✓ DNA உடன் இணைந்து தொழிற்படும் நொதியங்கள்
- ✓ DNA பிரித்தெடுப்பும் Gel அயனப் பகுப்பும்
- ✓ புரதத் தொகுப்பு
- ✓ பற்றீரியா பிளாஸ்மிட்களும் வைரஸ் ஜீனோமியம்
- ✓ Blotting நுட்பங்கள்
- ✓ DNA கை விரல் அடையாளம்
- ✓ rDNA தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படும் பரிமாணங்கள்
- ✓ DNA மரபணு பிரதியெடுத்தல்
- ✓ மரபணு மாற்றப்பட்ட உயிரங்கிகள் (GMO) மற்றும் விவசாயம், மருத்துவம், கைத்தொழில் மற்றும் GOMs தழுவிய சமூகப் பிரச்சினைகளில் அதன் பயன்பாடுகள்

